## கோவை அமிர்தா பல்கலைக்கழகத்தில்

# பொறியியல் வல்லுநர்கள் பங்கேற்கும் சர்வதேச மாநாடு




கோவை, மே 3 -

சுற்றுசூழல் பேரழிவை தடுக்கும் விதமாக வளர்ந்து வரும் உள்கட்டமைப்புகளில் நிலையான தொழில் நுட்பத்தை பயன்படுத்துவது குறித்த இரண்டு நாள் சர்வதேச மாநாடு கோவை அமிர்தாபல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் பொறியியல் துறையில் சிறந்து விளங்கும் 150-க்கும் மேற்பட்ட முன்னணி கல்வியாளர்கள், விஞ்ஞானிகள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் பங்கேற்றனர். இதில் நவீன கண்டுபிடிப்புகள், வளர்ந்து வரும் நாடுகளில் உள்கட்டமைப்பு குறித்த பிரச்சனைகள், அதில் உள்ள சவால்கள் மற்றும் அதை எதிர்கொள்வதற்கான சாத்தியகூறுகள் பற்றி விவாதித்தனர்.

இதில் இந்தியா, அமெரிக்கா, கனடா, சிங்கப்பூர், மலேசியா மற்றும் குவைத் உள்ளிட்ட நாடுகளை சேர்ந்த பல்கலைக்கழகங்களிலிருந்து 150 க்கும் மேற்பட்ட ஆராய்ச்சி கட்டுரைகள் பெறப்பட்டன. மாநாட்டில் பெங்களூரு இந்திய அறிவியல் நிறுவன பேராசிரியர் டி.ஜி. சீதாராம் சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகம் சிவில் மற்றும் சுற்றுசூழல் பொறியியல் துறை பேராசிரியர் டாக்டர். சியா சௌ. செய்ன் மற்றும் ஸ்பெயின் நாட்டை சேர்ந்த யுபிசி பார்கோல்னாடெக் பேராசிரியர் ஆலன் பேட்மேன் கலந்து கொண்டனர்.

இதில் பசுமை உள்கட்டமைப்பு, உள்கட்டமைப்பு விரிவாக்கம் சுற்றுச் சூழல் மற்றும் சமூக - பொருளாதாரதாக்கம், மேம்பட்டபொருட்கள் பயன்பாடு, நிலையான போக்குவரத்து அமைப்புகள் மற்றும் எப்படி உள் கட்டமைப்பு இயற்கை பேரழிவுகளை மனிதனால் சமாளிக்க முடியும் போன்ற பிரச்சினைகளை குறித்து விவாதித்தனர்.

இது குறித்து அமிர்தாபல்கலைக்கழகத்தின் சிவில் பொறியியல் துறை தலைவர் கே.எம் மினி கூறுகையில் எஸ்டிஸ் 2016 மாநாடு திட்டமிடுதல், வடிவமைத்தல், மற்றும் நிலையான உள் கட்டமைப்பு மேலாண்மை போன்ற அனைத்து பங்குதாரர்களின் ஒத்துழைப்பை ஊக்குவிப்பதாக அமையும். இந்தியா போன்ற வளரும் நாடுகளில் நிலையான பொருட்களின் பயன்பாடு மற்றும் வளங்கள் மூலம் நிலையான உள்கட்டமைப்பை கட்டத் தயாராக இருக்கும் புதிய தலைமுறை கட்டிட பொறியாளர்கள் தேவை. பழமை வாய்ந்த இந்திய கட்டுமான முறை இயற்கையுடன் இணக்கமாக இருந்தது.

ஆனால் அதற்கு மாற்றான நவீன கட்டுமான பொருட்கள் மட்டுமின்றி சுகாதாரக் கேடு, சுற்றுசூழல் மாசு, வளங்கள் பாதிப்பு, மக்கள் வாழ்க்கை நிலைபாதிப்பு உள்ளிட்ட இயற்கைக்கு மாறான சூழலை உருவாக்கியது. இந்திய கட்டுமான துறையில் சுற்றுசூழலுக்கு இணக்கமான நடைமுறைகள் மற்றும் சுற்றுசூழலை பாதிக்கும் பொருட்களை குறைத்தல் ஆகியவை வாழ்க்கை அமைப்பை மாற்றியமைக்கும்.

காலம் கடப்பதற் குள் புதுப்பிக்கத்தக்க ஆற் றல் வளங்களை பயன் படுத்தி மறுசுழற்சி மற்றும் மறு பயன்பாடு நடைமுறை கள் மற்றும் பொருட்கள் ஏற்றுக் கொண்டு உள்கட்ட மைப்பு வழிகளை கடை பிடிக்க வேண்டும் என்றார்.

பின்னர் சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகம் சிவில் மற்றும் சுற்றுசூழல் பொறியியல் துறை பேராசிரியர் சியா சென் செய்ன் நிலசீர் திருத்தம் குறித்தும் கட்டுமானத்துறையில் நவீன தொழில்நுட்பங்களை பயன் படுத்தும் முறைகளை பற்றியும் பேசினார்கள்.